

நீலகிரி மாவட்டம், உதகை ஏரியில் ரூ.7.51 கோடி மதிப்பீட்டில் தூர்வாரும் பணியினையும், ரூ. 1.20 கோடி மதிப்பீட்டில் உதகை ஏரியின் முகப்பில் திடக் கழிவுகளை நீக்கும் தானியங்கி இயந்திரம் அமைக்கும் பணியினையும் தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் 29.10.2024 அன்று துவக்கி வைத்தனர். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக் நீர்வளத்துறை கண்காணிப்பு பொறியாளர் (பவானி வடிநிலை வட்டம், ஈரோடு) கோபி உட்பட பலர் உள்ளனர்.



நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சி சைதாப்பேட்டை தொகுதி 142 வது வார்டு சலவைத் துறையில் ஆறு தொகுப்புடன் நான்கு அடுக்குகள் கொண்ட 272 குடியிருப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி வாயிலாக திறந்து வைத்தார். சைதாப்பேட்டையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட குடியிருப்புகளை பயனாளிகளுக்கு ஒப்படைத்தார் இந்நிகழ்வில் மண்டல குழு தலைவரும் மாமன்ற உறுப்பினருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய உதவி செயற்பொறியாளர் திருமதி லலிதா, மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார். மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் இனியன், குடிநீர் வாரிய உதவி செயற்பொறியாளர் புகழேந்தி, உதவி பொறியாளர் பாஷா, பகுதி கழக நிர்வாகிகள் களக்காடி எல்லப்பன்.ஆர்.ரமேஷ். வட்டக் கழக செயலாளர்கள் எஸ்.பி.கோதண்டம். சை.மு.சேகர் அட்கோ கமலநாதன் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

### கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய

# சிறப்பு ஊக்கத் தொகை விரைந்து வழங்க நடவடிக்கை!

## எடப்பாடி பழனிச்சாமிக்கு – அமைச்சர் ஆர்.இராஜேந்திரன் பதில்!

சென்னை, அக். 31 - சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிச்சாமி 28-10-2024 அன்று தனது X- தளத்தில் கரும்பு விலை உயர்த்தாதது மற்றும் சிறப்பு ஊக்கத் தொகை டன் ஒன்றுக்கு ரூ.215/-ஐ தீபாவளி பண்டிகைக்கு முன்னதாக வழங்கவில்லை எனக்குறிப்பிட்டு பதிவிட்டுள்ள அறிக்கைக்கான சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.இராஜேந்திரன் மறுப்பு அறிக்கை வருமாறு:-



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 2021ஆம் ஆண்டு புதிய அரசு பொறுப்பேற்றவுடன் விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையினை ஏற்று வேளாண்மைத்துறைக்கென இதுவரை நான்கு தனி நிதிநிலை அறிக்கைகளை அளித்து விவசாயிகளின் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதன் காரணமாக 115 இலட்சம் மெட்ரிக் டன்களுக்கு மேலாக உணவு தானிய உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது. மேலும் புதிதாக இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட புதிய மின் இணைப்புகள் வழங்கியது, புயல் உள்ளிட்ட இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கியது, கிராமப்புற விவசாயத்தை மேம்படுத்த கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சி திட்டத்தினை செயல்படுத்தியது போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு விவசாயிகளின் வாழ்வில் ஒளி ஏற்றப்பட்டுள்ளது.

கடந்த 2011-ம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற பத்தாண்டுகால செயலற்ற அ.தி.மு.க ஆட்சியில் சர்க்கரை ஆலைகள் யாவும் அழிவு பாதையை நோக்கி சென்று கொண்டிருந்த நிலையில் ஆட்சிமாற்றம் நிகழ்ந்த உடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி எடுக்கப்பட்ட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளின் காரணமாக சர்க்கரை ஆலைகளின் செயல்திறன் உயர்ந்து வருகிறது.

**கரும்பு விலை**

கடந்த அ.தி.மு.க ஆட்சியில் 2011 - ஆம் ஆண்டு முதல் 2021-ம் ஆண்டு வரையிலான பத்து ஆண்டுகளில் கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ.2250-ல் இருந்து ரூ.500 மட்டுமே உயர்த்தி ரூ.2750 ஆக வழங்கப்பட்டது.

அறிவிக்கப்பட்ட கரும்பு விலையும் உரிய நேரத்தில் வழங்காமல் தாமதமாக கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. அ.தி.மு.க ஆட்சி முடிவின் போது கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய கரும்பு விலை நிலுவைத் தொகை ரூ.675.52 கோடியாக இருந்தது.

அ.தி.மு.க ஆட்சியில் 2018-ம் ஆண்டு கரும்புக்கு வழங்கப்பட்டு வந்த மாநில அரசு பரிந்துரை விலை ரத்து செய்யப்பட்டதுடன் கரும்பு விலை நிர்ணயம் சம்பந்தமான முத்தரப்பு கூட்டமும் நடத்தப்படவில்லை. இவ்வாறு சர்க்கரை ஆலைகளை அழிவுப்பாதைக்கு கொண்டு சென்றதை எதிர்கட்சித் தலைவர் மறைத்து, உண்மைக்கு புறம்பான செய்திகளை தற்போது கரும்பு விவாசயிகளின் மீது அக்கறை கொண்டுள்ளதைப் போல நாடகமாடுகிறார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் இவ்வரசு பொறுப்பேற்றவுடன் 2020-21 அரவைப் பருவம் முதல் 2023-24 அரவைப் பருவம் வரை கரும்பு விலையை டன் ஒன்றுக்கு ரூ.2750லிருந்து ரூ.2900, ரூ.2950, ரூ.3016.25 மற்றும் ரூ.3134.75 என படிப்படியாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

அனைத்து சர்க்கரை ஆலைகளின் கரும்பு அரவைப் பருவ காலம் செப்டம்பர் 2024 மாதத்தில் நிறைவடைந்த நிலையில் அனைத்து சர்க்கரை ஆலைகளிலிருந்தும் சிறப்பு ஊக்கத் தொகை பெறுவதற்கான தகுதி வாய்ந்த கரும்பு விவசாயிகளின் முழு விவரங்கள் அடங்கிய பட்டியல் 2024 அக்டோபர் மாதம் முதல் சர்க்கரைத்துறை அலுவலகத்தில் சரிபார்க்கும் பணிக்காக பெறப்பட்டு வருகிறது. அதன்படி தகுதி வாய்ந்த 32 சர்க்கரை ஆலைகளில் 28.10.2024 வரை 23 சர்க்கரை ஆலைகளிலிருந்தும் தரவுகள் பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள ஒன்பது தனியார் சர்க்கரை ஆலைகளிடமிருந்து தரவுகளைப் பெறுவதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த 10 ஆண்டுகால செயலற்ற அ.தி.மு.க. ஆட்சியில் ஊக்கத்தொகை வழங்கப்பட்ட ஆண்டு முதல் 2017-2018 பருவத்திற்கு சுமார் எட்டு மாத கால அளவிலும், 2018-2019 பருவத்திற்கு சுமார் ஐந்து மாத கால அளவிலும், 2019-2020 பருவத்திற்கு சுமார் இரண்டு மாத கால அளவிலும் சிறப்பு ஊக்கத்தொகை வழங்கப்பட்ட நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் புதிய அரசு பொறுப்பேற்றவுடன் சுமார் ஒருமாத காலத்திலேயே தகுதி வாய்ந்த அனைத்து விவசாயிகளுக்கும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் இருந்து வருகிறார்கள்.

இந்நிலையில் கரும்பு விவசாயிகளின்மீது அக்கரை கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2023-24 அரவைப் பருவத்திற்கு வழங்கப்பட வேண்டிய சிறப்பு ஊக்கத் தொகையை வழங்குவதற்கான அரசாணையை கடந்த 17.10.2024 அன்று பிறப்பித்துள்ளார்கள். அரசு வழங்கும் சிறப்பு ஊக்கத் தொகை சரியான தகுதி வாய்ந்த கரும்பு விவசாயிகளின் வங்கி கணக்கிற்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படுவதற்கு ஏதுவாக அரசாணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் இதுவரை பெறப்பட்ட 23 சர்க்கரை ஆலைகளின் தரவுகள் சர்க்கரைத்துறை மற்றும் அரசு தரவு மையத்தில் தற்போது கூர்ந்தாய்வு செய்யப்பட்டு ஒன்பது சர்க்கரை ஆலைகளின் தரவுகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையிலான குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையிலான குழுவின் ஒப்புதல் கிடைக்கப்பெற்ற உடன் சம்பந்தப்பட்ட தகுதி வாய்ந்த கரும்பு விவசாயிகளின் வங்கி கணக்கிற்கு நேரிடையாக அனுப்பி வைக்கப்படும். பிற சர்க்கரை ஆலைகளின் தரவுகளும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு ஒப்புதல் பெற்று நான்கு வார காலத்திற்குள் தகுதி வாய்ந்த கரும்பு விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு வழங்கிட துரித நடவடிக்கையினை இவ்வரசு எடுத்து வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி, கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய சிறப்பு ஊக்கத் தொகையை விரைந்து வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலையில், இன்று வரை சிறப்பு ஊக்கத் தொகையை கரும்பு விவசாயிகளுக்கு வழங்குவதற்கான எந்தவிதமான நடவடிக்கைகளையும் இவ்வரசு எடுக்கவில்லை என தெரிவித்திருப்பது அடிப்படை ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் ஆர்.இராஜேந்திரன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# தொ.மு.ச. பேரவை நிர்வாகக் குழுக் கூட்டம்!

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் நிர்வாகக் குழுக் கூட்டம் 09.11.2024 மற்றும் 10.11.2024 ஆகிய நாட்களில் காலை 10.00 மணி அளவில் “கலைஞரகம்” எண்.25, தியாகராயா தெரு, வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை 17 எனும் முகவரியில் உள்ள தொ.மு.ச. பேரவை அலுவலகத்தில் பேரவைத் தலைவர் கி.நடராசன் தலைமையில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் புதியதாக நியமிக்கப்பட்ட பேரவை நிர்வாகிகள்அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்:பேரவைப் பொதுச்செயலாளரின் விளக்கவுரை, பேரவை நடவடிக்கைகள், கூட்டத் தலைவரால் அனுமதிக்கப்படும் இதர பிரச்சினைகள்.

**இடம் : கலைஞரகம்**

**மு.சண்முகம் எம்.பி.**
பொதுச் செயலாளர்
தொ.மு.ச. பேரவை



தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி டெல்லியில் ரயில்வே வாரிய தலைவர் சதீஷ்குமாரை சந்தித்து தஞ்சை நாடாளுமன்றத் தொகுதி மக்களின் பல்வேறு ரயில்வே திட்டத்திற்கான கோரிக்கைகளை வைத்துள்ளார், கோரிக்கைகளை உடன் ஆய்வு செய்த ரயில்வே வாரிய தலைவர் அனைத்து கோரிக்கைகளின் மீதும் விரைந்து நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். மேலும் திருச்சியில் இருந்து தஞ்சாவூர் வழியாக தாம்பரம் வரை இயக்கப்படும் புதிய சிறப்பு ரயிலை தினசரி இயக்குவதற்கு நெறிமுறை படுத்துமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

### 1,84,000க்கும் மேற்பட்டவர்களுக்கு நிலுவைத் தொகை - கருணைத் தொகை - போனஸ் வழங்கிய

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மின் கழக தொ.மு.ச. நன்றி!

## பா.மணிமாறன் அறிக்கை !

சென்னை, அக்.31- ஊதிய உயர்வு நிலுவைத்தொகை - கருணைத் தொகையுடன் போனஸ் நிலுவைத்தொகையுடன் அகவிலைப்படி உயர்வு வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு மின்கழகத் தொ.மு.ச. நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளது. இதுகுறித்து தமிழ்நாடு மின்கழகத் தொ.மு.ச. பொதுச்செயலாளர், தொ.மு.ச. பேரவை இணை பொதுச்செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு மின்சாரவாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்களுக்கு 01.12.2019 முதல் ஊதியத்தை உயர்த்தி, தற்போது ஊதிய உயர்வு 2ம் நிலுவைத் தொகை, 20 சதவீகிதம் கருணைத் தொகையுடன் போனஸ், 3 சதவீகிதம் நிலுவைத்தொகையுடன் அகவிலைப்படி உயர்வு என மின்வாரிய பணியாளர்கள் மனம் மகிழும் வண்ணம் திராவிட மாடல் முதலமைச்சர் தளபதி அவர்கள் வழங்கியுள்ளார்.

முதன் முதலில் வழங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்

- மின்வாரிய தொழிலாளர்களுக்கு 1970ல் முதன் முதலில் ஊதிய உயர்வு வழங்கியவர் -
- தொழிலாளர்களுக்கு தீபாவளி போனசுடன் கருணைத் தொகையையும் வழங்கியவர் -
- மின்வாரிய தொழிலாளர்கள் 1989ல் அகவிலைப்படி உயர்வை சதவீகிதத்தில் வழங்கியவர் -

மின்வாரிய தொழிலாளர்களுக்கு, முதன்முதலில் பல சலுகைகளை வழங்கி, தமிழக மக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கும் மின் வாரிய தொழிலாளர்களின் குடும்பங்களில் ஒளி தீபம் ஏற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்

**சலுகைகளை பறித்த அ.தி.மு.க அரசு:**

முத்தமிழறிஞர் கலைஞர் தொழிலாளர்களுக்கு வழங்கிய பல சலுகைகளை 2011-2021 ஆட்சி காலத்தில், தொழிலாளர் விரோத அ.தி.மு.க.அரசு பறித்து தொழிலாளர்களை வஞ்சித்தது.

- அ.தி.மு.க. ஆட்சியில் மின்வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறி யாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு 2019 முதல் ஊதிய உயர்வை வழங்காமல் இழுத்தடித்தது.
- அ.தி.மு.க. ஆட்சியில் மின்வாரிய தொழிலாளர்களுக்கு கருணைத் தொகையுடன் 20 சதவீகிதம் போனஸ் ஐ 10 சதவீகிதமாக குறைத்தது.
- அ.தி.மு.க. ஆட்சியில் அகவிலைப்படி உயர்வை பறித்தது, இதன்மூலம் பணியில் இருப்பவர்களுக்கும், பணியில் இருந்த ஒய்வு பெற்ற மின்வாரியப் பணியாளர்களையும் மன உளைச்சலுக்கு ஆளாக்கியது.

**தொழிலாளர் நலன் காக்கும் திராவிட மாடல் அரசு**

தமிழக மக்கள் எதிர்பார்த்தது போல 07.05.2021ல் திராவிட மாடல் முதலமைச்சராக அன்புத்தளபதி அவர்கள் பொறுப்பு ஏற்றார். அ.தி.மு.க. அரசு தொழிலாளர் நலனில் அக்கரை இல்லாமல் பறித்த பல சலுகைகளை மீண்டும் தொழிலாளர்களுக்கு வழங்கினார்.

- மின்வாரியத் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்களுக்கு அ.தி.மு.க. அரசு வழங்காமல் இருந்த ஊதிய உயர்வை மின்துறை அமைச்சர் அவர்களின் பரிந்துரையின் பேரில் 01.12.2019 முதல் உயர்த்தி வழங்கி, எந்த ஒரு மாதத்தையும் விடுபடாமல் அனைத்து மாதங்களிலும், ஊதியத்தில் உயர்வை கொடுத்து, மின்வாரிய பணியாளர்களை மகிழ்ச்சி அடையச் செய்து சரித்திர சாதனை புரிந்தவர் முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்கள்தான்.
- 10 சதவீகிதமாக அ.தி.மு.க. அரசால் குறைக்கப்பட்ட, தீபாவளி போனசை, கருணை உள்ளத்தோடு, கருணைத் தொகையுடன் 20 சதவீகிதமாக உயர்த்தி வழங்கியவர்

திராவிட மாடல் தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத் தளபதி அவர்கள்.

- அன்புத்தளபதி அவர்கள் முதலமைச்சராக பொறுப்பு ஏற்றவுடன், மின்வாரியத்தில் பணிபுரிகிறவர்களுக்கும், பணிபுரிந்து ஒய்வு பெற்றவர்களுக்கும், உடனுக்குடன் அகவிலைப்படி உயர்வை வழங்கி வருகிறார்கள். தற்போது 01.07.2024 முதல் 3 சதவீகிதம் உயர்த்தி 53 சதவீகிதமாக நிலுவைத் தொகையுடன் அகவிலைப்படி உயர்வை வழங்கினார்.

இதன்மூலம், மின்வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு என சுமார் 84,000 பணியாளர்களும், மின்வாரியத்தில் பணியிலிருந்து ஓய்வு பெற்ற ஒய்வூதியதாரர்கள் என சுமார் 1,00,000த்திற்கு மேற்பட்டவர்களும் அவர்களது குடும்பமும் பயன்பெற்றனர்.

**தொழிலாளர்களின் பொற்கால திராவிட மாடல் ஆட்சி**

மின்வாரியத்தில் பணி செய்பவர்களுக்கு ஊதிய உயர்வு நிலுவைத் தொகையை, கருணைத் தொகையுடன் போனஸ், நிலுவைத் தொகையுடன் அகவிலைப்படி உயர்வை, எந்த ஒரு மின்வாரிய தொழிற்சங்கமும், அரசிற்கு கோரிக்கை வைக்காமலும், எந்த வித போராட்டத்தில் ஈடுபடாமலும், தொழிலாளர்களின் தேவை அறிந்து தாயுள்ளத்தோடு வழங்கியவர் பொற்கால ஆட்சி புரியும் திராவிட மாடல் தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத் தளபதி அவர்கள்.

**நெஞ்சார்ந்த நன்றிகள் :**

கொரோனா போன்ற பேரிடர் காலங்களிலும், புயல், மழை போன்ற இயற்கை சீற்றங்களிலும், தீவிரமாக களப்பணியாற்றி, தமிழ்நாடு மக்களுக்கு தடை யின்றி மின்சாரம் கிடைக்க உழைக்கும் மின்சார வாரியத் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் சார்பாகவும், தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் சார்பாகவும் எங்களது நெஞ்சார்ந்த நன்றிகளைத் முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்து கொள்கிறோம்.

இவ்வாறு தமிழ்நாடு மின்கழகத் தொ.மு.ச., பொதுச்செயலாளர், தொ.மு.ச. பேரவை இணை பொதுச்செயலாளர், பா.மணிமாறன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள்.

# முரண்களை வெல்லும் திராவிடம்!

**மொழி, இனம், மதம், நாடு என எல்லாவற்றையும் தாண்டி, உலக மக்கள் அனைவரையும் நேசிக்கும் திராவிடம்! ஆனால், தமிழ், தமிழர் உரிமைகளை ஒருநாளும் விட்டுக் கொடுக்காது!**

**‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்று உரத்து முழங்கும் திராவிடம். ஆனால், பிறப்பின் அடிப்படையிலான சாதியின் பெயரால் ஒருவர் ஒடுக்கப்பட்டிருந்தால், அவர் சாதியை அறிந்து அவருக்கு சாதியின் பெயரால் இடஒதுக்கீடு வழங்கும்!**

**‘ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே மதம், ஒரே தேர்தல்’ என்னும் குரலை என்றும் எதிர்க்கும் திராவிடம்! ஆனால், ‘ஒன்றே குலம், அனைவருக்கும் ஒரே சுடுகாடு’ என்பதை மகிழ்ந்து வரவேற்கும்!**


**‘கோயிலுக்குப் போகாதே, பகுத்தறிவுப் பாதையைத் தேர்ந்தெடு’ என்று சொல்லும் திராவிடம்! ஆனால் கோயிலுக்குப் போக விரும்பும் ஒருவரின் உரிமையை யாரேனும் தடுத்தால், தடுக்கப்பட்டவரின் கைகளைப் பிடித்துக் கோயிலுக்குள் அழைத்துச் செல்லும்!**

**‘பெண்களே உங்களுக்கு மட்டும் ஏன் தாலி? தமிழர் திருமணத்தில் தாலி என்பது இடையில் வந்த பழக்கம்’ என்று அறிவுறுத்தும் திராவிடம். ஆனால், இசை வேளாளர் சமூகத்தில் பிறந்த பெண்கள் தாலி கட்டிக்க கொள்ளக் கூடாது என்று சொன்னால், ஏன் என்று கேட்டு அவர்களின் கழுத்தில் தாலி கட்டச் சொல்லும்!**

**ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னனைக் கொண்டாடும் திராவிடம்! ஆனால் தமிழ் மன்னர்கள் என்னும் ஒரே காரணத்திற்காக, பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, ராஜசூயம் வேட்ட பெருநற் கிள்ளி ஆகிய மன்னர்களின் ஆரியப் பண்பாட்டின் அடிமைத்தனத்தை என்றும் ஏற்காது!**

**இவற்றை முரண்கள் என்று கருதுவோர், திராவிடக் கோட்பாட்டின் அடித்தளத்தை அறிந்து கொள்ளாதவர்கள் என்றே பொருள்!**

**(26.10.2024 அன்று, சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற 'திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்க' தொடக்க விழாவில்.....)**



அன்புடன்
**சுப.வீரபாண்டியன்**
தலைவர் திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை



தருமபுரி மேற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவப் படத்தினை மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன் மற்றும் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர். ஆ.மணி ஆகியோர் திறந்து வைத்து மலர் அஞ்சலி செலுத்தினர். உடன் மாவட்ட அவைத் தலைவர் கே.மனோகரன், முரசொலி மணி, முகவர் சரவணகுமார், உள்ளிட்ட கழகத்தினர் உள்ளனர்.